நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## S.T.C. No.1379/2025

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் |
| தந்தை / கணவர் பெயர் | : | முனியன் |
| கிராமம் | : | வனவாசி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 53 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 09–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.31 PM )

1. நான் தற்போது நங்கவள்ளி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 22.04.2024 ம் தேதி 16.00 மணிக்கு நான் நங்கவள்ளி காவல் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது இரகசிய தகவலாளி நிலையத்தில் ஆஜராகி நங்கவள்ளி பத்ரகாளியம்மன் கோவில்

அருகில் கஞ்சா என்னும் போதைப்பொருள் விற்பனை செய்ய இருப்பதாக கிடைத்த இரகசிய தகவலை பொதுநாட்குறிப்பில் பதிவுசெய்தேன்.

2. பின்னர் ஜலகண்டாபுரம் வட்ட காவல் ஆய்வாளர் அவர்களிடம் போன் மூலம் அனுமதிபெற்றும், அனுமதி கடிதம் கொடுத்து அனுப்பினேன். ரோந்துப்பணிக்கு தேவையான உபகணரங்களை எடுத்துக்கொண்டு தகவலாளியுடன் நங்கவள்ளி பத்ரகாளியம்மன் கோவில் அருகில் சென்று கண்காணித்துக்கொண்டு இருந்தபோது சுமார் 27 வயது மதிக்கத்தக்க ஒரு நபரை தகவலாளி அடையாளம் காட்ட போலீசார் எங்களை கண்டவுடன் தப்பி ஓட முயன்றவரை உடன் வந்த நங்கவள்ளி காவல் நிலைய முதல்நிலை காவலர் 173 திரு. கலையரசன் ஓமலூர் காவல் நிலைய முதல்நிலை காவலர் 2233 திரு. செல்வேந்திரன் ஆகியோர் உதவியுடன் சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க அவர் முன்னுக்கு பின் முரணாக தனது பெயர் விலாசங்களை கூறினார்.

3. பின்னர் வைத்தீஸ்வரன் த.பெ. சண்முகசுந்தரம், பத்ரகாளியம்மன் கோவில் தெரு, நங்வள்ளி மேட்டுர் வட்டம் என்று தனது முகவரியை கூறினார். அவரிடம் நங்கவள்ளி போலீசார் என்று எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டோம். கஞ்சா என்னும் போதைப்பொருள் விற்பனை செய்ய இருப்பதாக நம்பகமான தகவல் இருப்பதாகவும், உன்னை நாங்கள் சோதனை செய்யலாமா அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் அவர்கள் முன்னிலையில் அழைத்து செல்லலாமா என்றுக் கேட்டோம்.

4. அவர் நீங்களே என்னை சோதனை செய்யலாம் என்று அவர் விருப்பத்தைக் கூறினார். சோதனை விருப்ப படிவம் தயார் செய்து எதிரி வைத்தீஸ்வரன், உடன் வந்த சாட்சிகள் முதல்நிலை காவலர் 173 திரு. கலையரசன் மற்றும் முதல்நிலை காவலர் 2233 திரு. செல்வேந்திரன் ஆகியோர் முன்னிலையில் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்றேன். ( **சோதனை விருப்ப படிவம் அசாஆ. 1ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) வைத்தீஸ்வரனை உடன் வந்த போலீசார் முன்னிலையில் சோதனை செய்தேன்.

5. அவரிடம் வெள்ளைநிற பாலித்தீன் கவரில் கஞ்சா என்னும் போதைப்பொருள் இருந்தது. அதை எடைப்போட்டு பார்க்க 10 கிராம் அளவு இருந்தது. பின்னர் வைத்தீஸ்வரனை முறைப்படி காவல் படுத்தினோம். கஞ்சாவை மகசரில்

கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசரில் உடன்வந்த சாட்சிகள் முதல்நிலை காவலர் 173 திரு. கலையரசன் மற்றும் முதல்நிலை காவலர் 2233 திரு. செல்வேந்திரன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றி சாட்சி கையொப்பம் பெற்றேன்.

6. பின்னர் தலா 5 கிராம் பாலித்தீன் கவரில் போட்டு பச்சைநிற கவரில் நூல்சுற்றி S1, S2 என்று குறியீடு செய்து SHO சீல் வைத்தேன். ( **10 கிராம் எடையுள்ள கஞ்சாவை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**
7. பின்னர் எதிரி வைத்தீஸ்வரன் கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் 18.00 மணிக்கு நங்கவள்ளி காவல்நிலையம் முன்பு இந்த சம்பவம் தொடர்பாக நங்கவள்ளி காவல் நிலைய குற்ற எண். 75/2024 ச.பி. 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act 1985 ன் படி வழக்கு பதிவுசெய்து விரிவு அறிக்கை ஒன்றை தயார் செய்தேன். முதல் தகவல் அறிக்கை அசலையும், கைப்பற்றுதல் மகஜர் அசல், மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சாவை படிவம் 91 மூலம் விரிவு அறிக்கையுடன் கனம் குற்றவியல் நீதித்துறை 1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். ( **படிவம் 91 அசாஆ.3, விரிவு அறிக்கை அசாஆ.4, முதல் தகவல் அறிக்கை அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** ஆஜர் எதிரியிடம் இருந்துதான் வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள கஞ்சாவை கைப்பற்றினேன்.
8. இந்த வழக்கு சம்மந்தமாக மேல் விசாரணை செய்ய நங்கவள்ளி காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். **(இந்த வழக்கில் இன்று தடயவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட கைப்பற்றப்பட்ட கஞ்சா குறித்தான ஆய்வறிக்கை அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இரகசிய தகவல் குறித்து பதிவுசெய்யப்பட்ட காவல் நிலைய பொதுநாட்குறிப்பை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அசாஆ.5 முதல் தகவல் அறிக்கையில் பொது நாட்குறிப்பில் பதிவுசெய்யப்பட்ட விவரம் குறித்து எந்த விவரங்களும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.
2. இரகசிய தகவலாளி நேரில் ஆஜராகி தகவல் அளித்ததாக முதல் தகவல் அறிக்கையில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காவல் ஆய்வாளருக்கு

நான் அனுப்பிய அனுமதி கடிதத்தில் அதுப்பற்றி குறிப்பிட்டுள்ளேன். அசாஆ.5 முதல் தகவல் அறிக்கையில் காலம் 3(a) ல் குற்ற நிகழ்வு நேரம் 16.00 மணி என்னு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலம் 3(b) ல் காவல் நிலையத்திற்கு தகவல் பெறப்பட்ட நேரம் என்ற இடத்தில் 18.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. இந்த வழக்கில் இரகசிய தகவலின் அடிப்படையில் வழக்கு பதிவுசெய்யப்பட்டதாக நான் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் முதல் தகவல் அறிக்கையில் தன்னிச்சையாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் வாய்மொழி புகார் அல்லது எழுத்துமூலமான புகார் இருந்தால் மட்டுமே அவ்வாறு குறிப்பிடுவோம். இல்லையென்றால் தன்னிச்சையாக பதிவுசெய்யப்பட்ட முதல்தகவல் அறிக்கை என்றுதான் குறிப்பிடுவோம்.

4. இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றபோது என்னை தவிர முதல்நிலை காவலர் கலையரசன், செல்வேந்திரன், பாரா காவலர் ஒருவரும் இருந்தார். செல்வேந்திரன் என்பவர் சம்பவத்தின்போது ஓமலூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்தார்.

5. பார்வை மகசரில் குறிப்பிடப்பட்ட சம்பவயிடம் குறித்து தேர்வீதி அருகில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் அருகில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், ஆனால் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கையில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை மட்டுமே குறிப்பிடுவோம். பார்வை மகசரில் அந்தஇடத்தில் உள்ள சுற்றுப்புரங்கள் அனைத்தையும் பார்வையிட்டு விவரங்களை குறிப்பிடுவோம். நான் சொல்வதுபோல் கிடையாது என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. இந்த வழக்கில் இரகசிய தகவல் குறித்து தனித்தகவல் அறிக்கை எதுவும் நான் தயார் செய்யவில்லை. விரிவு அறிக்கை தயார் செய்துள்ளேன். அனுமதி கடித்ததை எந்த காவலர் மூலம் கொடுத்து அனுப்பினேன் என்று காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போதும், நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கும்போதும் குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் அனுமதி கடிதம் கொண்டுசென்ற நபரின் பெயரை குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை.

7. நான் தயார் செய்த விரிவு அறிக்கையில் காவலர் 1742 என்று ஒரு காவலரை குறிப்பிட்டு அனுமதி கடிதத்தை கொடுத்து அனுப்பியதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த காவலரின் பெயரை நான் குறிப்பிடவில்லை என்றாலும், அந்த காவலர் ஒரு சாட்சியாக இந்த வழக்கில் விசாரணை செய்யப்படவில்லை என்றாலும் சரிதான். நான் NDPS சட்டத்தின் பிரிவு 42(2) ஐ சரியாக நான் பின்பற்றவில்லைஎன்றால் சரியல்ல.

8. நான் காவல் ஆய்வாளருக்கு அனுப்பபட்ட அனுமதி கடிதத்தில் நேரம் குறிப்பிடப்படவில்லை. தொலைபேசி மூலம் அனுமதி பெற்று அனுமதி கடிதம் தயார் செய்து கொடுத்து அனுப்பியதால் நேரம் குறிப்பிடவில்லை. பொதுவாக காவல் உதவி ஆய்வாளர் தன்வசம் தன் அலுவல் முத்திரையை வைத்திருப்பார்கள் என்றால் சரிதான். அனுமதி கடிதத்தில் கையொப்பமிட்ட நபரின் பெயர் மற்றும் பதவி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றாலும், அவரது முத்திரை வைக்கப்படவில்லை என்றாலும் சரிதான். ஆனால் அனுமதி கடிதம் காவல் ஆய்வாளருக்கு தான் எழுதப்பட்டு அவர் அனுமதித்து கையொப்பம் செய்துள்ளார்.

9. எந்த வகையான தராசை ரோந்து பணிக்காக எடுத்துச்சென்றோம் என்று நான் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். எடைக்கற்களை எடுத்துச்சென்றதாக நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் இரகசிய தகவலாளி சம்பவயிடத்திற்கு எங்களுடன் வந்தாரா, தனியாக வந்தாரா என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அடையாளம் காட்ட உடன் வந்ததாக குறிப்பிட்டுள்ளேன்.

10. முதல் தகவல் அறிக்கையில் சம்பவயிடத்திற்கு ஒரே வாகனத்தில் சென்றோமா அல்லது தனித்தனியான வாகனத்தில் சென்றோமா என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. பொதுவாக ரோந்து பணிக்கு செல்லும்போது அந்த பகுதியில் உள்ள அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகளின் விவரங்களை தெரிந்து வைத்திருப்போம் என்றால் சரிதான்.

11. இந்த வழக்கில் கிராம நிர்வாக அலுவலரை நான் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று நான் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. முதல் தகவல்

அறிக்கையில் கஞ்சாவை யார் எடைபோட்டார்கள் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழககில் தனியாக கைப்பற்றப்பட்ட பொருள் குறித்து Test Memo எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

12. கைப்பற்றப்பட்ட கஞ்சாவை எடைபோடும்போது புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரியை 22.04.2024 ம் தேதி 17.00 மணிக்கு நங்கவள்ளி பத்ரகாளியம்மன் கோவில் அருகில் வைத்து கைதுசெய்தேன். இந்த வழக்கில் மகசர் 17.15 மணிக்கு தயார் செய்தேன். போதைபொருள் வழக்குகளில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்பட்ட பிறகு தான் எதிரியை கைதுசெய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

13. இந்த வழக்கில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை. எதிரியை 17.00 மணிக்கு கைதுசெய்து 18.00 மணிக்கு வழக்கு பதிவுசெய்துள்ள சூழ்நிலையில் எவ்வாறு 17.15 மணிக்கு தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசர் குற்ற எண் மற்றும் சட்டபிரிவை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மகசரில் குற்றஎண் மற்றும் சட்டபிரிவு நான் குறிப்பிடவில்லை.

14. நான் நீதித்துறை நடுவரிடம் கைப்பற்றப்பட்ட பொருளை ஆஜர் செய்து மாதிரி எடுக்கவில்லை. சம்பவயிடத்தில் வைத்து S1, S2 என்று மாதிரி எடுத்து SHO சீல் வைத்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யபோவதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் வட்டார தடயவியல் ஆய்வாளரை நான் சாட்சியாக சேர்க்கவில்லை.

15. கைப்பற்றப்பட்ட பொருளை 4 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன் என்றால் 22.04.2024 ம் தேதி படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு நீதிமன்ற காவலர் மூலம் அனுப்பி வைத்தேன். அது எப்போது நீதிமன்றத்தில் பெறப்பட்டது என்று எனக்கு தெரியாது. படிவம் 91 ல் 30.04.2024 ம் தேதி இந்நீதிமன்றத்தில் பெறப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். இடைப்பட்ட காலகட்டத்தில் கைப்பற்றப்பட்ட கஞ்சா யாருடைய பொறுப்பில் இருந்தது என்றால் நீதிமன்ற காவலர் பொறுப்பில் இருந்தது.

16. சோதனை சம்மத கடிதத்தில் கேள்வியும், பதிலும் ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளது என்றாலும் அது எதிரியின் கையால் எழுதப்படவில்லை என்றாலும் சரிதான்.

நான் எழுதி அவரிடம் கையொப்பம் பெற்றேன். அந்த சோதனை சம்மத கடிதத்தில் வெள்ளை நிற பாலித்தீன் பை என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் விரிவு அறிக்கையை எனது உயர் அதிகாரிக்கு அனுப்பி வைக்கவில்லை என்றாலும், நீதிமன்றத்திற்கு தான் அனுப்பி வைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அசலை நீதிமன்றத்திற்கும், நகலை உயர் அதிகாரிக்கும் அனுப்பி வைத்தேன். அவ்வாறு அனுப்பி வைத்ததாக முதல் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**17.** படிவம் 91 ல் தலா 05 கிராம் எடையுள்ள கஞ்சா என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த படிவம் 91 ல் S1, S2 என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஓமலூர் காவல் நிலைய காவலர் செல்வேந்திரன் நங்வள்ளி காவல் நிலையத்திற்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், நங்கவள்ளி காவல் நிலையத்தில் போதிய காவலர்கள் இருக்கிறார்கள் என்றாலும், எனக்கு வேண்டிய காவலரை வைத்து எதிரிக்கு எதிராக வழக்கை தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அவர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் தனி அலுவலாக ஓமலூர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட அனைத்து காவல் நிலையங்களுக்கும் தனி அலுவலாக செல்ல நியமிக்கபட்டிருந்தார். அந்த உத்தரவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**18.** மேற்படி வழக்கு ஆவணங்களில் பொது ஜன சாட்சிகளை அழைத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. யாரும் இல்லாததால் என்று குறிப்பிட்டுள்ளேன். சோதனை சம்மத கடிதத்தில் சாட்சிகளின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சாட்சிகளின் கையொப்பத்திற்கு கீழ் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தில் பொது ஜன சாட்சிகளை அழைத்ததாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**19.** நான் அளித்த கு.வி.மு.ச. 161 வாக்குமூலத்தில் இரகசிய தகவலாளி நேரில் வந்து தகவல் சொன்னதாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ரோந்து பணிக்கு கிளம்பி சென்றநேரம் குறித்து நான் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு சென்ற நேரம் குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 16.30 மணிக்கு சென்றதாக விரிவு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன்.

**20.** சம்பவம் நாளில் நான்தான் நிலைய பொறுப்பு அதிகாரியாக இருந்தேன்.

காவலர்கள் உதவியுடன் எதிரியை பிடித்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

21. நான் சொல்வதுபோல் இரகசிய தகவலாளி காவல் நிலையம் வந்து தகவல் சொல்லவில்லை என்றாலும், நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து ஆவணங்கள் எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றாலும், எதிரியிடம் இருந்து கஞ்சா கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

22. எதிரி நங்கவள்ளி அரசு மருத்துவமனையில் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார் என்றாலும், கொரோனா காலகட்டத்தில் எனக்கு தெரிந்த நபருக்கு கொரோனா சான்றிதழ் வழங்க அவரிடம் கேட்டேன் என்றாலும், அதை அவர் தர மறுத்ததால் அவரை பழிவாங்கும் எண்ணத்தில் நடக்காத ஒரு சம்பவத்தை குறிப்பிட்டு தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. புள்ளி விவரக்கணக்கிற்காக எதிரி மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(02.00 PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**